# திருச்சி – 23, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(த)
## முதல்வர் அவர்களின் செயல்முறைகள்
**பிறப்பிப்பவர்: முனைவர்.பு.சு.விஜயலட்சுமி,எம்.காம்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.,**

ந.க.எண். 2063 /ஈ/2021 நாள். 22.12.2023

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி - திருச்சி-23, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - இளநிலை உதவியாளர் - திரு.ம.விக்னேஷ் என்பாருக்கு பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1) சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண். 32083/பி2/2019 நாள்.07.08.2021
2) அரசாணை நிலை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை, நாள்.08.03.2023
3) சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1058/பி1/2023 நாள். 06.12.2023 உடன் இணைத்து பெறப்பட்ட அரசு கடித எண்.1535/ஜி2/2023-1 நாள். 30.10.2023

***********

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில், மயிலாடுதுறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் ஆய்வக உதவியாளராக பணிபுரிந்து வந்த திருமதி.மு.கௌசல்யா என்பார் பணிக்காலத்தில் இயற்கை எய்தியதால், அன்னாரின் (வாரிசுதாரர்) மகன் திரு.ம.விக்னேஷ் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, அன்னார் இக்கல்லூரியில் 23.08.2021(மு.ப.) பணியில் சேர்ந்தார்.

பார்வை (2)-ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுபவர்களுக்கு நியமன அதிகாரியே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என பார்வை (3)-ல் காணும் சென்னை-06, கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ம.விக்னேஷ் என்பார் பணியில் சேர்ந்து ஓராண்டு காலம் முடிவுற்றமையால், அன்னார் பணியில் சேர்ந்த நாளான 23.08.2021 (மு.ப.) முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேற்காணும் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலக்கட்டத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை

Scanned with CamScanner

நூல் தேர்வு மற்றும் அரசு பணியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

முதல்வர்

முதல்வர்
தந்தை பெரியார் அரசு கலை
மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620 023
D.O.CODE Cl. 102

பெறுநர்
திரு.ம.விக்னேஷ்,
இளநிலை உதவியாளர்,
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருச்சி-23

நகல்

1) கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை-15 (தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
2) மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
திருச்சி மண்டலம், திருச்சி – 23
3) உபரி - 1

Scanned with CamScanner